**தகவல் அறியும் உரிமை சட்டம் – 2005**
முதன்மைக் கல்வி அலுவலகம்
வேலூர்

பொது தகவல் வழங்கும் அலுவலர் மற்றும்
முதன்மைக் கல்வி அலுவலரின்
நேர்முக உதவியாளர் (மேல்நிலைக் கல்வி), வேலூர்.

ஓ.மு.எண்.2470/ஆ3/2025 நாள்: .06.2025

பொருள் : தகவல் அறியும் உரிமை சட்டம் – 2005 –ன்படி, திருவண்ணாமலை மாவட்டத்தைச் சேர்ந்த திரு.B.நளினி என்பார் கோரிய தகவல்கள் அனுப்புதல்–சார்பு.

பார்வை : திருவண்ணாமலை மாவட்டத்தைச் சேர்ந்த திரு.B.நளினி, என்பாரின் தகவல் அறியும் உரிமை சட்டம் மனு நாள்.28.05.2025 (இவ்வலுவலகம் பெறப்பட்ட நாள்.02.06.2025)

-------

பார்வையில் காணும் மனுதாரர் கோரிய தகவல்களுக்கு சார்ந்த பள்ளித் தலைமையாசிரியர்கள் (தொழிற்கல்வி) என்பதால் தகவல் அறியும் உரிமைச்சட்டம் – 2005 பிரிவு 6(3)ன்படி பெறப்பட்ட மனு நகல் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது. எனவே இதன் மீது தனிக்கவனம் செலுத்தி உரிய காலக் கெடுவிற்குள் மனுதாரருக்கும், நகலை இவ்வலுவலகத்திற்கும் தகவலை அளிக்குமாறு சார்ந்த பள்ளித் தலைமையாசிரியர்கள் தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு : மனு நகல்

பொது தகவல் வழங்கும் அலுவலர்
மற்றும் முதன்மைக் கல்வி அலுவலரின்
நேர்முக உதவியாளர் (மேல்நிலைக் கல்வி),
வேலூர்,9.

பெறுநர்,
சார்ந்த பள்ளித் தலைமையாசிரியர்கள்,
அரசு/நிதயுதவி மேல்நிலைப் பள்ளிகள்,
வேலூர் மாவட்டம்.

நகல்,
திருமதி.B.நளினி,
எண்.133, 3வது குறுக்குத் தெரு,
ஸ்வர்ணபூமி, சமுத்திரம் கிராமம்,
ஸ்ரீ ரமணாஸ்ரமம் அஞ்சல்,
திருவண்ணாமலை – 606 603.

NICMail - dsedrti
Time: 11:54AM
02/06/2025

**பள்ளிக் கல்வி இயக்ககம், சென்னை – 600 006.**
**தகவல் அறியும் உரிமைச் சட்டம் – 2005**

2470

**ந.க. எண். 027819/F/RTI/2025, நாள்: 02.06.2025**

**பொருள்:** தகவல் அறியும் உரிமைச் சட்டம் – 2005–இன் படி B. நளினி என்பாரின் மனு உரிய நடவடிக்கைக்கு அனுப்புதல் – சார்பாக.

**பார்வை:** திருவண்ணாமலை மாவட்டத்தைச் சேர்ந்த B. நளினி என்பாரின் மனு இவ்வலுவலகத்தில் பெறப்பட்ட நாள்: 28.05.2025

2 - JUN 2025
வேலூர் - 632009

*****

இவ் இயக்ககத்தில் தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005–இன் படி பெறப்பட்ட மனு இணைப்புகளுடன் மேற்படி சட்டத்தின் உட்பிரிவு 6(3)இன் படி தகவல் வழங்க உரிய நடவடிக்கைக்காக இத்துடன் இணைத்து அனுப்பலாகிறது.

தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005–இன் முக்கியத்துவம் கருதி மனுதாரருக்கு உரிய காலகெடுவிற்குள் தகவல் வழங்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. இதில் காலதாமதம் ஏற்படின் சம்பந்தப்பட்ட மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலகப் பொதுத் தகவல் அலுவலரே முழு பொறுப்பு ஏற்க நேரிடும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

**இணைப்பு:**
அசல் மனு

2/6/25

பொது தகவல் அலுவலர் மற்றும்
உதவி இயக்குநர் (சுற்றுச் சூழல்)

2/6/25

பெறுநர்
**பொதுத் தகவல் அலுவலர்,**
**முதன்மைக் கல்வி அலுவலகம்,**
**அனைத்து மாவட்டம்.**

| நகல் | |
|---|---|
| B. நளினி,<br>எண்.133, 3வது குறுக்குத் தெரு,<br>ஸ்வர்ணபூமி, சமுத்திரம் கிராமம்,<br>ஸ்ரீ ரமணாஸ்ரமம் அஞ்சல்,<br>திருவண்ணாமலை–606 603. | இந்நேர்வில் மேல்முறையீட்டு அலுவலர் அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் ஆவார் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். வருங்காலங்களில் இப்பொருள் சார்ந்த தகவல்களுக்கு பெறுநர் முகவரியில் குறிப்பிட்டுள்ள அலுவலரை தொடர்பு கொள்ளுமாறு தெரிவிக்கப்படுகிறது. |

F:\assistant\61004 ALL CEO'S doc

R.No. 1100

**<u>தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005</u>**

**<u>பதிவு அஞ்சல் ஒப்புகை அட்டையுடன்</u>**

அனுப்புநர் மிக அவசரம்


B.நளினி B.A., B.L.,
133, 3-வது குறுக்கு தெரு,
ஸ்வர்ணபூமி, சமுத்திரம் கிராமம்,
ஸ்ரீ ரமணாஸ்ரமம் அஞ்சல்,
திருவண்ணாமலை - 606 603


TEN RUPEES

HIGH COURT MADRAS
13 MAY 2025

பெறுநர்

உயர்திரு. இணை பதிவாளர் [RTI Act]/APIO
சென்னை உயர்நீதி மன்றம். அவர்கள்
சென்னை உயர்நீதி மன்ற வளாகம்.
Madras High Court. Madras. 600104.

ஐயா,

பொருள்: குறைந்த கல்வித் தகுதி தொழிற்கல்வி ஆசிரியர்கள் - 24 நபர்கள் நியமன விவரம் - தகவல் அறியும் உரிமை சட்டம் 2005-ன்படி கோருதல் - சார்பு.

RTI
48364

பார்வை: குறைவான கல்வித் தகுதியுடன் பணிபுரியும் மேல்நிலைத் தொழிற்கல்வி 24 ஆசிரியர்களின் விவரங்கள் கோரி பலமுறை அனுப்பப்பட்ட கடிதங்கள்.

--------

தமிழ்நாட்டில் பல்வேறு அரசு மேல்நிலைப் பள்ளிகளில் தற்போதுவரை பட்டதாரி ஆசிரியர் பணி நிலையில் பணிபுரியும் அரசு ஆணைக்கு எதிராக (அ.ஆ.எண்: 1719.) நாள் 14.9.1978 குறைந்த கல்வித் தகுதியுடன் பணிபுரியும் பல்வேறு பாடங்களை கற்பிக்கும் தொழிற்கல்வி ஆசிரியர்களின் பெயர், கல்வித் தகுதி, கல்வித் தகுதியின் உண்மைத் தன்மை, பணிபுரியும் பள்ளி போன்ற தகவல்களை பலமுறை கோரியும் நாள்வரை வழங்கப்படவில்லை. இடைநிலை ஆசிரியருக்கான கல்வித் தகுதி கூட இல்லாமல் சான்றிதழ் படிப்பை முடித்தவர்களுக்கு நீதிமன்ற வழிகாட்டுதலின்படி மேல்நிலையில் பட்டதாரி ஆசிரியருக்குரிய ஊதிய நிலையில் பணியாணை வழங்கி அனுமதித்திருப்பது கல்வியின் தரத்தை கேள்விக்குறியாக்கியுள்ளது. இது சார்ந்த விவரங்கள் பலமுறை கோரியும் வழங்கப்படாத நிலையில் பல்வேறு சந்தேகங்களுக்கு வழிவகை செய்துள்ளது.

எனவே இக்கடிதம் கிடைக்கப்பெற்ற பத்து நாட்களுக்குள் கீழ்குறிப்பிட்ட தகவல்களை தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005-ன்படி வழங்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

1. குறைந்த கல்வித் தகுதி கொண்ட தொழிற்கல்வி ஆசிரியரின் பெயர் மற்றும் பணிபுரியும் பள்ளி.
2. பெற்ற கல்வித் தகுதி மற்றும் உண்மைத் தன்மை சான்று பெறப்பட்ட விவரம்.
3. பணியில் சேர்ந்த நாள், பணிவரன்முறை செய்யப்பட்ட நாள்.
4. பெற்றோர் ஆசிரியர் கழகம் மூலம் ஊதியம் பெற்று பணிபுரிய்ந்த பள்ளி மற்றும் பணிபுரிந்த காலம் சான்றுடன் - விவரங்கள்.
5. பட்டதாரி ஆசிரியர் நிலையில் ஊதியம் வழங்க வழங்கப்பட்ட இயக்குநரின் கடிதங்களின் நகல்கள் / ஆணை:
6. எந்தவித தகுதி தேர்வுமின்றி இவர்களை பணியமர்த்த வழங்கப்பட்ட இயக்குநர் அவர்களின் செயல்முறைகள் அடங்கிய ஆணையின் நகல்.

குறிப்பு: உரிய கட்டணம் வில்லையாக இதில் ஒட்டப்பட்டுள்ளது (ரூபாய் பத்து)

நாள்: 29.04.2025
இடம்: திருவண்ணாமலை

B.Nalini

(B.நளினி)

நகல்:

1) செயலர், பள்ளிக்கல்வித்துறை,
   தலைமைச் செயலகம், சென்னை-9.
2) முதலமைச்சரின் தனிப்பிரிவு,
   தலைமைச் செயலகம், சென்னை-9.
3) முதன்மை செயலர், பள்ளிக்கல்வித்துறை,
   தலைமைச் செயலகம், சென்னை-9.
4) இயக்குநர், பள்ளிக்கல்வி, பள்ளிக்கல்வித்துறை,
   டி.பி.ஐ. வளாகம், கல்லூரி சாலை, சென்னை-6.
5) இணை இயக்குநர், (தொழிற்கல்வி), பள்ளிக்கல்வித்துறை,
   டி.பி.ஐ. வளாகம், கல்லூரி சாலை, சென்னை-6.
6) தகவல் வழங்கும் அலுவலர் மற்றும் உதவி இயக்குநர் (சுற்றுச்சூழல்),
   பள்ளிக் கல்வித்துறை, DPI வளாகம், கல்லூரி சாலை, சென்னை-6.